திரு என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாவட்டத் தொழில் மையங்களுக்கு எந்த அடிப்படையில் தொகைகள் வழங்கப்படுகின்றன? அதை அதிகரிப்பதற்கு அரசாங்கத்திடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு ஆனூர் பு.கோ. ஜகதீசன்: தலைவர் அவர்களே, மாவட்டத் தொழில் மையங்கள், மத்திய அரசால் அனுமதிக்கப்பட்டு, ஒவ்வொரு மாவட்டத் தொழில் மையத்திற்கும் ரூ. 4 இலட்சம் என்று அவர்கள் ஒதுக்குகிறார்கள். ஆனாலும்கூட 50 சதவீதம் மாநில அரசும் போட்டு ரூ. 8 இலட்சம் ஒதுக்கப்படுகிறது. சில இடங்களில் ரூ. 8 இலட்சத்திற்கும் மேலாக ஆனாலும்கூட, மாநில அரசே கூடுதலாகும் செலவையும் ஏற்கிறது.

திரு என். எஸ். வி. சித்தன்: இதற்காகத்தான் நான் இந்தக் கேள்வியைக் கேட்டேன். இதைத் துவங்குவதில், பிற்படுத்தப்பட்ட மாவட்டங்களுக்கு முன்னுரிமை கொடுத்து, அதிகத் தொகை கொடுக்க அரசு முன்வருமா? மாவட்டத் தொழில் மையங்களிலிருந்து தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளுக்கு தாக்கீது போகுமானால், அதை அவர்கள் ஏற்றுக்கொண்டு கடன் வழங்குவதற்கு துணையாக, இனி வருங்காலங்களிலாவது மாவட்டத் தொழில் மையங்களிலிருந்து அந்த வேலை தேடி, தொழில் தேடி வருபவர்களுக்கு தாக்கீது போகுமானால், வங்கிகளிலே மறுக்கப்படாத அளவிற்கு இனியாவது தொகை வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு ஆனூர் பு. கோ. ஜெகதீசன்:: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4 இலட்சம் என்று சொல்வது மாவட்ட தொழில் மையங்கள் இயங்குவதற்காக மத்திய அரசு வழங்குகின்ற தொகை. ஆனால் கடன் வழங்குவதற்காக ஒரு தனிப்பட்ட முறையிலே குறியீடு அமைக்கவில்லை. அந்தந்த மாவட்டத்தை பொறுத்தவரையில் எவ்வளவு பேர் வருகிறார்கள் என்பதை சென்ற ஆண்டிலிருந்து கணக்கிட்டு ஏறக்குறைய தமிழ்நாடு பூராவும் 18,100 பேர்களுக்கு தரவேண்டுமென்று இறுதியாக முடிவு எடுத்துக் குறியீடு நிர்ணயித்திருக்கிறோம். அந்தக் குறியீடுபடி நடந்து வருகிறது.

[முற்பகல் 11-00]

கோத்தகிரி யூனியன் தங்குமரஹடாவில் சிறு தொழில்கள்.

60—(†வினா— எண். 11868) திரு எம். சிவக்குமார்: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோத்தகிரி யூனியனை சேர்ந்த தெங்குமரஹடா என்னும் பகுதியில் சிறுதொழில்கள் நிறுவ அரசு ஏதாவது திட்டம் ஏற்பாடு செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

1987 மார்ச் 4]

மாண்புமிகு திரு ஆனூர் பு. கோ. ஜகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை (ஆ) வினாவிற்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

சென்னையில் மின் வெட்டு.

திரு என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, On a point of order சில நாட்களுக்கு முன்னாலே நம்முடைய மின்துறை அமைச்சர் அவர்கள் தமிழகத்திலே மேலும் மின் வெட்டு வராது. தற்போது ஆலைகளுக்கு வழங்கியிருக்கின்ற மின்வெட்டைக் கொண்டு அடுத்த மழைக்காலம் வரை சமாளிக்கலாம் என்று சொன்னதாக நான் செய்தியினை பார்த்தேன். ஆனால் இன்றைக்கு காலையிலே சென்னை நகரம் முழுவதும் மின் வெட்டு இருந்தது. ஏன் சட்டமன்ற உறுப்பினர் விடுதியிலேகூட மின்வெட்டு காரணமாக 3 மணி நேரம் நாங்கள் எல்லாம் குளிக்க முடியாமல் கஷ்டப் பட்டோம். சட்டமன்றம் நடக்கின்ற நேரத்திலே சென்னையிலே இந்த நிலை என்று சொன்னால் தமிழ்நாட்டில் இருக்கின்ற தொலை தூரங்களில் உள்ள கிராம மக்களின் நிலை என்ன என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது Point of order இல்லை, Point of information.

திரு. என்.எஸ்.வீ. சித்தன் : Sir I am on a point of information. நான் உங்கள் மூலமாக தெரிந்துகொள்ள விரும்புவது தற்போதுள்ள மின்வெட்டைக் கொண்டே வருகின்ற மழைக் காலங்களை சமாளிக்க முடியுமா? தற்போது மின்சாரம் எவ்வளவு உற்பத்தியாகிறது? எவ்வளவு விநியோகிக்கப்படுகிறது என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, சென்னை தென் பகுதியில் காலையில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட மின் தட்டுப்பாட்டை வைத்து தமிழ்நாடு பூராவும் உள்ள மின்சாரத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்